உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

| | |
|---|---|
| பெயர் | : ஜெகஜீவன்அ.சா.9) |
| தகப்பனார் பெயர் | :பிச்சை |
| கணவர் பெயர் | : |
| வயது | :48 |
| கிராமம் | :அரும்பனூர் |
| வட்டம் | :மதுரை கிழக்கு |
| தொழில் | :ரியல்எஸ்டேட் தொழில் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

15.09.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 சேதுராமன், சோனை, பிரவு அனைவரையும் தெரியும். சாட்சியிடம் பார்வை மகஜர் காட்டப்பட்டு, அதில் உள்ளமுதல் கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புகொள்ளவே மேற்படிஆவணம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2017ம் ஆண்டு எந்த மாதம், எந்த தேதி என்று நினைவில்லை. காவல்நிலையத்தில் இருந்து கணேசன் மற்றும், அ.சா.1 ஆன சேதுராமன் ஆகியோருக்கு இடையே நடந்த சண்டையை பொறுத்து கொடுத்த புகாரின் பேரில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைவதற்கு ஒருவாரம் கழித்து காவலர்கள் என் வீட்டிற்கு வந்து தகவல் கொடுத்தார்கள். நான் ஒத்தக்கடை காவல்நிலையத்திற்கு ஒருவாரம் சென்று கையெழுத்து செய்தேன். எனக்கு அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று கண்பார்வை கோளாறு இருந்ததால் தெரியவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 26.06.2017 அன்று ஒத்தக்கடை காவல்ஆய்வாளர் இரவு சுமார் 2.30 மணியளவில் 2 குற்றவழக்குகளுக்கும், என்னிடமும், சிவனடியார் அவர்களிடமும், மாதிரி வரைபடமும், மற்றும் பார்வைமகஜர் தயார் செய்து அதில் கையெழுத்திட்டுவிட்டு, தற்போது, ஆஜர் எதிரிகள் உறவினர் என்பதால் அவர்களுடன் சமாதானம் ஆகிகொண்டு அவர்களுக்கு ஆதரவாக காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்திட்டேன் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.09.15 18:13:53 +0530

Assistant Sessions Judge

Melur